# 11

# நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றம்

## (5:17-20)

*மேசியா எதிர்பார்க்கப்பட்டு முன்னெதிர் நோக்கப்பட்டு இருந்தார், ஆனால் அவர் எப்படிப்போல இருப்பார் என்பது மக்களால் புரிந்துகொள்ளப்பட இயலாததாக இருந்தது. அவரது தைரியமான, அதிகாரத்துவம் மிகுந்த பாடங்கள், தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு நேர்மாறானவையாக அல்லது அதை மதிக்காத தன்மை நிறைந்தனவாகக்கூடக் கண்ணோக்கப் பட்டன. இவ்வசனங்களில் இயேசு தம்மைப்பற்றி விளக்கப்படுத்தி இருக்கிறபடி, ஏதொன்றும் சத்தியத்தில் இருந்து தொலைவில் இருக்க முடிந்திராது. இப்பகுதி (5:17-20), மலைப்பிரசங்கத்தின் முக்கியப் பொருள்பகுதியைத் தொடங்குகிறது (5:17-7:12). இது இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதியினுடைய (5:21-48) போதனையை முன்னெதிர் நோக்குகிறது, இந்தப் பகுதியில் இயேசு, நியாயப்பிரமாணத்தைப் பற்றி, ஆழமற்ற சிந்தனை அல்லது தவறான சிந்தனையில் இருந்து எழுந்திருந்த, ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விளக்கங்களைத் திருத்தினார்.*

### *"அழிக்கிறதற்கு அல்ல" (5:17)*

**[17]"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்."**

**வசனம் 17. எண்ணிக்கொள்ளாதேயுங்கள்** என்பது தவறாக புரிந்துகொள்ளுதல் ஒன்றை திருத்தும் இயேசுவின் நோக்கத்தை அடையாளப்படுத்துகிறது (காண்க 10:34). இது பவுலின் நிருபங்களில் உள்ள "நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்" என்ற சொற்றொடர் (ரோமர் 11:25; 1 தெசலோனிக்கேயர் 4:13) போன்றதாக உள்ளது. இயேசு, தாம் **நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு** முயற்சிசெய்யவில்லை என்பதைத் தமது உரையைக் கேட்டவர்களுக்கு மறு உறுதிப்படுத்தினார். வேதாகமத்தின் ஆங்கிலப் பதிப்புகளில் "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தை பெரிய எழுத்துக்களில் போடப்பட்டிருத்தல், இந்தச் சொற்றொடர், மோசேயின் மூலமாக இஸ்ரவேல் மக்களுக்குத் தேவனால் தரப்பட்ட கட்டளைகள் மற்றும் நியமங்களைக் குறிப்பதாக மொழிபெயர்ப்பாளர்கள் புரிந்துகொண்டனர்

என்று அர்த்தப்படுத்துகிறது.[1] மோசேயின் நியாயப்பிரமாணம், புறஜாதி மக்களினங்களுக்கு அல்ல, ஆனால் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களினமான இஸ்ரவேலுக்குத் தரப்பட்டிருந்தது. இது இஸ்ரவேலர் போன்ற, ஆபிரகாமின் எல்லா சந்ததியார்களையும் உள்ளடக்கவில்லை.

ஆபிரகாமின் மூலமாகப் பிறந்த ஈசாக்கின் வழித்தோன்றல் என்ற வகையில், யூதராயிருந்த இயேசு கிறிஸ்து, மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழாக வாழ்ந்து மரித்தார். அவர் ஒருவர்தாம் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்து நடந்தவராக இருந்தார் (எபிரெயர் 4:15; 5:8, 9). அவர் நியாயப்பிரமாணத்திற்கு மாபெரும் மதிப்பைப் காண்பித்தார், அதை மதியாதவராக அவர் ஒருக்காலும் காணப்பட்டதில்லை. யூதத்துவ ரபீக்கள் பலரையும் கல்வியாளர்களையும், அவர் கண்டனம் பண்ணியதாகக் காணப்படும் இடம் எதுவாக இருந்தாலும், அது நியாயப்பிரமாணத்தை அல்ல, ஆனால் நியாயப்பிரமாணத்தை அவர்கள் மோசடி செய்ததற்காகவே அவ்வாறு கண்டனம் பண்ணினார். நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் மாத்திரம் இஸ்ரவேல் மக்களை நீதிமான்களாக்கிவிடுவதாக இருக்கவில்லை; அவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதல் உள்ள இருதயங்களுடன் அதைக் கனப்படுத்த வேண்டியவர்களாக இருந்தனர் (காண்க ரோமர் 2:13-16, 25-29; 3:20).

நியாயப்பிரமாணம் என்பது, மனித குலத்தின் தவறுதலின் காரணமாக உருவாக்கப்பட்ட அவசரமான பதிலியாக இருக்கவில்லை. அது மீட்பிற்கான தேவனுடைய திட்டத்தின் பாகமாக எப்போதும் இருந்துள்ளது. அது ஒரு தெய்வீக நோக்கத்திற்காக இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்டிருந்தது. ரோமருக்குப் பவுல், "நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது" என்று கூறினார் (ரோமர் 7:12, 14). அது "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" என்று கலாத்தியருக்கு அவர் எழுதினார் (கலாத்தியர் 3:24). ஆகையால் நியாயப்பிரமாணம், தேவனுடைய நோக்கத்திற்கு எதிரானதாக இருக்கவில்லை. மக்கள் தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ள முடியாது என்று காட்டுவதற்கும் கிறிஸ்துவினிடத்திற்கு வழிநடத்திச் செல்வதற்குமே அது தரப்பட்டிருந்தது (ரோமர் 7:7-11; 8:3, 4; கலாத்தியர் 3:22-29).

இருப்பினும் நியாயப்பிரமாணம், உண்மையான மீட்பிற்கு ஆதாரமூலமாயிருத்தலை ஒருக்காலும் நோக்கமாகக் கொண்டிருந்ததில்லை (கலாத்தியர் 3:21). மக்கள் நியாயப்பிரமாணத்தைப் பரிபூரணமாகக் கைக்கொள்ள முடிந்திருந்தது என்றால், அவர்கள் அதினால் இரட்சிக்கப்பட்டிருக்க முடியும் - ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய இயலாது என்பதைத் தேவன் அறிந்திருந்தார். பிரச்சனை நியாயப்பிரமாணத்தில் அல்ல, ஆனால் அதன் நீதியான உயர்கொள்கைகளுக்கு ஏற்ப வாழ மக்கள் இயலாமை அல்லது மனவிருப்பம் இல்லாமையே பிரச்சனையாக இருந்தது (ரோமர் 7:14-25).

நமக்கு நாமே செய்துகொள்ள இயலாததை - நியாயப்பிரமாணத்தைப் பரிபூரணமாக வாழ்தலை - செய்யும்படிக்கு, தேவன் தமது குமாரனை அனுப்பினார் (காண்க 2 கொரிந்தியர் 5:21). மேலும் அவர், பாவத்திற்கான நமது பரிபூரணமான பலியாக இருக்கும்படி வந்தார் (ரோமர் 5:12-21; எபிரெயர் 10:5-10; 1 பேதுரு 2:21-25). அவர் தாமே நியாயப்பிரமாணத்தின்படி

*வாழ்ந்தது மட்டுமின்றி, இவ்வசனப் பகுதியில் உரைக்கப் பட்டுள்ளபடி, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சி செய்யும்படி தமது நாட்களில் வாழ்ந்த மற்றவர்களுக்கு அவர் போதித்தார் (19:16-22; லூக்கா 10:25-28).*

*இவ்வசனத்தில் இயேசு, நியாயப்பிரமாணம் பற்றிய தமது போதனையைக் குறித்து நிலவிய தவறான புரிந்துகொள்ளுதலைத் திருத்த நாடினார். வேதபாரகர்களும் பரிசேயர்களும், ரபீத்துவப் பாரம்பரியங்களை நியாயப்பிரமாணத்திற்குச் சமமானவைகளாகக் கருதினர். இயேசுவோ, அந்தப் பாரம்பரியங்களுக்கு எதிராக வெளிப்படையாகவே பேசியபடியினாலும், அவற்றை அர்த்தமின்றிக் கடைப்பிடிக்க முயற்சி செய்யாததாலும், அவர் நியாயப்பிரமாணத்தை ஒழிக்க வந்தார் என்று யூதத் தலைவர்களால் சித்தரிக்கப்பட்டார் (காண்க 15:1-9). நிச்சயமாகவே அது அவரது நோக்கமாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலை, அதன் தோற்றகாலத் தூய்மைக்கு மீளக்கட்டுவிக்க விரும்பினார் (19:1-9).*

***வந்தேன்*** *என்ற வார்த்தையின் மூலமாக இயேசு. நீண்ட காலமாக முன்னெதிர் நோக்கப்பட்ட மேசியாவாகத் தம்மை அடையாளப்படுத்தினார். "வருகிறவர்" என்பது மேசியாத்துவச் சொல்விளக்கமாக இருந்தது (காண்க சங்கீதம் 118:26; மல்கியா 3:1; மத்தேயு 11:2, 3; 21:9; யோவான் 4:25). நியாயப்பிரமாணத்தின் உண்மையும் நிறைவுமான விளக்கவுரையாளராக மேசியா இருப்பார் என்பது மேலோங்கிய கண்ணோட்டமாக இருந்தது.*

*யூதர்கள் பழைய ஏற்பாட்டை நாம் சாதாரணமாகப் பிரிப்பதில் இருந்து மாறுபட்ட வகையில் பிரித்து வைத்திருந்தனர். இதை நாம் பகுதியாக (நியாயப்பிரமாணம், வரலாறு, பாடல் மற்றும் தீர்க்கதரிசனம் என்று) பிரிக்கையில், எபிரெயர் வேதாகமத்தில் மூன்று பிரிவுகள் (நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனங்கள் மற்றும் எழுத்துக்கள்; காண்க - லூக்கா 24:44 என்று) மாத்திரமே உள்ளன. பழைய ஏற்பாடு முழுவதும், "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும்" என்று அடிக்கடி பேசப்பட்டது (7:12; 11:13; 22:40; நடபடிகள் 13:15; 28:23; ரோமர் 3:21).*

***"அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்."*** *இயேசு நியாயப்பிரமாணத்தை "நீக்கவோ" அல்லது "அழிக்கவோ" வரவில்லை என்றிருக்கையில், அவர் அதை "நிறைவேற்ற" அல்லது "முழுமைப்படுத்தவே" வந்தார். "அழிக்கிறதற்கு" என்பதற்கு இவ்விடத்தில் அவர் பயன்படுத்திய கிரேக்க வார்த்தை, "அழித்தல்," "ஒன்றுமில்லாது செய்தல்" அல்லது "செல்லாதபடி செய்தல்" என்று அர்த்தப்படுகிறது. "நிறைவேற்றுகிறதற்கே" என்பதற்கான கிரேக்க வார்த்தை, "முழுமையாக்குதல்," "நிறைவுக்குத் கொண்டுவருதல்" அல்லது "முடிவிற்குக் கொண்டுவருதல்" என்று அர்த்தப்படுகிறது. இயேசு, நியாயப்பிரமாணத்தை அழிப்பதற்குப் பதிலாக, அதன் நோக்கத்தை நிறைவேற்றி முடித்து, பின்பு அதை, தாம் சிலுவையில் மரித்தபோது, (நமது) வழியில் இருந்து எடுத்துப் போட்டார் (ரோமர் 10:4; எபேசியர் 2:15). அந்த வேளையில், நியாயப்பிரமாணம் "மரித்தது," ஆகவே இன்னும் அதை வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இனியும் இல்லை (ரோமர் 7:4; கலாத்தியர் 3:25; 5:1-4). இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, தமது அப்போஸ்தலர்களிடத்தில், தாம் அவை எல்லாவற்றையும் "நிறைவேற்றி விட்டதாக" கூறினார் (லூக்கா 24:44).*

அவர் கடைப்பிடிக்கத் தவறிய பகுதி என்று நியாயப்பிரமாணத்தில் எதுவும் இருக்கவில்லை, மற்றும் அவரைக் குறித்துக் கூறப்பட்ட பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் எதுவும் நிறைவேறாமலும் போகவில்லை. இன்றைய நாட்களில் நியாயப்பிரமாணம் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக்கூறும் எவரொருவரும், தேவனுடைய திட்டத்தில் இனியும் ஒரு பகுதியாக இராத ஒரு முறைமையைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறார்.

## *"ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும்" (5:18)*

**18 "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

**வசனம் 18.** இயேசு தமது அடுத்த உறுதிப்பாட்டை, **"மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்ற வார்த்தைகளை முகவுரையாகக் கொண்டு உரைத்தார். "மெய்யாகவே" என்பதற்கான கிரேக்க வார்த்தை, "ஆமென்" என்ற நமது ஆங்கில வார்த்தைக்குப் பின்னால் உள்ளது. இந்தப் பரிசுத்த உச்சரிப்பை இயேசு, தமது கூற்றுக்களின் முடிவுப்பகுதியில் அல்ல (தமிழில் இது முடிவுப்பகுதியில்தான் உள்ளது), ஆனால் தமது கூற்றுக்களின் தொடக்கப்பகுதியில் தனித்துவமான வகையில் பயன்படுத்தினார். இந்த அதிகாரம் முழுவதிலும், தேவனுடைய சித்தத்தை இயேசு அதிகாரத்துவத்துடன் முன்வைக்கையில், "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பது மறுபடியும் உரைக்கப்பட்டுள்ளது (5:20, 22, 26, 28, 32, 34, 39, 44).

இயேசு, **"நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது"** என்று கூறினார்.[2] "ஒரு சிறு எழுத்து" அல்லது "ஒரு எழுத்தின் உறுப்பு" என்பது நேரடியான "அர்த்தத்தில் கிரேக்க மொழியின் ஒரு இயோட்டா" என்பதாக உள்ளது. "இயோட்டா" என்பது கிரேக்க அகரவரிசையில் மிகச்சிறிய எழுத்தாக உள்ளது. நியாயப்பிரமாணம் தோற்ற காலத்தில் எழுதப்பட்ட எபிரெய மொழியில் "யாட்" என்பது மிகச்சிறிய எழுத்தாக உள்ளது. "உறுப்பு" அல்லது "டிட்டில்" என்பது "கொம்பு" என்று குறிப்பாக அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. இது ஒரு எபிரெய எழுத்தில் இருந்து இன்னொரு எபிரெய எழுத்தை வித்தியாசப்படுத்துகிற மிகச்சிறிய குறியைக் குறிப்பிடுகிறது. இதே கொள்கையை விவரிக்க, ஆங்கிலத்தில் நாம் "i என்ற எழுத்தின்மீது வைக்கப்படும் புள்ளி மற்றும் t என்ற எழுத்தின் குறுக்குக் கோடு" என்று கூறலாம். ஒவ்வொரு தீர்க்கதரிசனமும், அடையாளமும், வாக்குத்தத்தமும் எந்த விதிவிலக்கும் இன்றி நிறைவேற்றப்படும். சிலுவையின்மீது கிறிஸ்துவினால் அந்த நிறைவேற்றம் நிறைவேற்றித் தீர்க்கப்படும்வரையிலும், நியாயப்பிரமாணம் கட்டுப்படுத்தியது மற்றும் அதன் ஒவ்வொரு பகுதியையும், அந்தக் காலத்து யூதர்கள் கடைப்பிக்கக் கடமைப்பட்டிருந்தனர்.

இப்போது நாம், ''கிறிஸ்துவின் பிரமாணம்'' (கலாத்தியர் 6:2) என்ற புதிய பிரமாணத்தின்கீழ் வாழ்கிறோம். தேவன் தமது பழைய பிரமாணத்தின்கீழ் நாம் வாழ வேண்டும் என்று நம்மிடத்தில் கேட்பதில்லை. அதில் உள்ள கொள்கைகளில், இயேசு கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தில் இணைக்கப் பட்டுள்ளவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும்; ஆனால் அவைகள் பழைய பிரமாணத்தில் காணப்பட்டன என்ற காரணத்திற்காக இன்றி, அவைகள் புதிய உடன்படிக்கையில் உள்ளன என்பதால் நாம் அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும். பவுல், "இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே ..." என்று எழுதினார் (ரோமர் 3:21, 22). நான்கு சுவிசேஷங்களிலும் இயேசு, 120க்கும் அதிகமான முறைகள், "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார். அவர், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என்று அறிவித்தார் (யோவான் 12:48). மேலும் அவர், "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை'' என்றும் கூறினார் (மத்தேயு 24:35).

## "இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும்" (5:19)

***19''ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக் கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்."***

***வசனம் 19.*** வேதபாரகரும் பரிசேயர்களும், நியாயப்பிரமாணத்தை, பெரியவை சிறியவை என்று பிரித்துவைத்து, சில கட்டளைகளை மற்றவற்றைக் காட்டிலும் அதிக முக்கியமானவை என்று விளக்கப்படுத்திக் கொண்டிருந்தனர். ஜேக் லூயிஸ் அவர்கள், இவ்விரண்டையும் பின்வருமாறு ஒப்பிட்டார்:

> *நியாயப்பிரமாணத்தில் 613 கட்டளைகளை ரபீக்கள் எண்ணினர் மற்றும் பெற்றோரைக் கனம் செய்தல் என்ற கட்டளையை ஒரு கனமான கட்டளையாக தகுதிப்படுத்தினர் (யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16), அதே வேளையில் பறவைகளின் கூடுகள் பற்றிக் கையாளும் உபாகமம் 22:6ல் உள்ளது மிகவும் அற்பமான கட்டளையாக இருந்தது. இருப்பினும் இவற்றில் எதுவும் புறக்கணிக்கப்படக் கூடாது.[3]*

*மிஷ்னா பின்வறுமாறு கூறுகிறது,*

> *மார்க்கத்தில் சிறு கடமையை, பெரிய கடமையைப் போன்றே உன்னிப்பாகக் கவனியுங்கள், ஏனெனில் பல்வேறு மார்க்கக் கடமைகளில் எந்த ஒன்றிற்கு*

*எவ்வகையான பலன் வருகிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பதில்லை ... மார்க்கக் கடமைகளில் மிக முக்கியமானதற்குப் பின்னால் ஓடுவது போன்றே மிகவும் சிறியதற்குப் பின்னாலும் ஓடுங்கள், மற்றும் மீறுதலில் இருந்து விலகி ஓடுங்கள். மார்க்கக் கடமை ஒன்றைச் செய்தல் இன்னும் ஒன்றைச் செய்யும் விழிப்பைத் தரவழைக்கிறது.*[4]

*இயேசு, இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் **சிறிதானதொன்றையாகிலும்** என்பது போன்றே சொற்றொடர்களைப் பயன்படுத்தியபோது, ஒத்துப்போகும் இயல்புள்ள மொழிநடையை அவர் பயன்படுத்தினாரா? வேதபாரகரும் பரிசேயர்களும், சில சட்டங்களை மற்றவற்றைக் காட்டிலும் முக்கியமானவையாகக் கருதியதால், மற்றவற்றைவிட "குறைவானவை" என்று அவர்கள் கருதிய கட்டளைகள் புறக்கணிக்கப்படலாம் என்று அவர் கூறினாரா? அனேகமாக இல்லை என்றே கூறலாம். இயேசுதாமே மிகப்பெரிய கட்டளையை ("உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருவாயாக") மற்றும் இரண்டாவது மிகப்பெரிய கட்டளையை ("உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக") அடையாளப்படுத்தினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (22:34-40). மேலும் அவர், வேதபாரகரும் பரிசேயர்களும் (ஒற்தலாமிலும், வெந்தையத்திலும், சீரகத்திலும் தசம பாகம் செலுத்துதல் போன்றே) மிகச் சிறிய கட்டளைகள் மீது கவனம் குவித்திருந்த அதே வேளையில்" (நீதி, இரக்கம், விசுவாசம் போன்ற) கனமான கட்டளைகளைப் புறக்கணித்திருந்தனர் என்றும் கூறினார். அவர்கள் இருவகையான கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று இயேசு அறிவித்தார் (23:23).*

*அவர்கள் **பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவர்** என்ற அவரது போதனை, மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்காத கிறிஸ்தவர்கள் தவறில் உள்ளனர் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, அவர் தேவனுக்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்த ஒரு இணைகருத்தைப் பயன்படுத்தினார். இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியதன் வெளிச்சத்தில் அவரது கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். வேதவசனங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது கிறிஸ்துவின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலை அர்த்தப்படுத்துகிறது.*

## "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் ..." (5:20)

***20"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."***

***வசனம் 20.*** *பரந்த கருத்தளவில் இயேசு,* ***"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச்***

**சொல்லுகிறேன்"** என்று கூறினார். அவரது சீஷர்கள், "பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க, சட்டங்களுக்கு இயந்திரத்தனமாகக் கீழ்ப்படிதலுக்கும் அப்பால் செல்ல" வேண்டியிருந்தது என்பதே அவரது வலியுறுத்தமாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை.[5] "வேதபாரகர் பரிசேயர்" ஆகியோரின் நீதி, அவர்கள் தங்கள் மார்க்கத்தின் புறம்பான சடங்காச்சாரங்கள் மற்றும் சடங்குகளைக் கடைப்பிடித்த வரையிலும், அவர்களின் உள்ளான இருதயங்களில் தேவபக்தியற்ற உணர்வுகளைச் சேர்த்து வைக்க அனுமதித்தது. இது தேவனுடைய பிரமாணத்தை மோசமாக மாசுபடுத்துதலாகும். இயேசுவின் சீஷர்கள் புறம்பான வகையில் எண்ணற்ற சடங்குகளைச் செய்வதால், அவர்கள் தங்கள் இருதயங்களின் சிந்தனைகளைப் பற்றி அக்கறை கொள்ளத் தேவையில்லை என்று முடிவு செய்யக் கூடாது. பிற்பாடு இயேசு, வேதபாரகருக்கும் பரிசேயருக்கும், பாத்திரத்தின் உட்புறத்தை அசுத்தமாக விட்டுவிட்டு, வெளிப்புறத்தைச் சுத்தம் செய்வது நல்லதல்ல என்று கூறி இருந்தார் (23:26).

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## இயேசுவும் நியாயப்பிரமாணமும் (5:17-20)

இயேசு, மோசேயின் நியாயப்பிரமாணத்தை "அழிப்பதற்கு" அல்ல, ஆனால் அதை "நிறைவேற்றவே" வந்தார். யூதர்கள் தங்கள் பல்வேறு விளக்கங்களாலும், கூடுதல்களினாலும், துணைப்பிரிகளினாலும், எடுத்துப்போட்டிருந்த, நியாயப்பிரமாணத்தின் கண்ணியத்தை மீளக்கட்டவே அவர் வந்தார். புதிய யுகமான கிறிஸ்துவின் யுகத்திற்கு ஒரு உடன்படிக்கையையும் அவர் நிலைநாட்டினார் என்பது அவரது விளக்கங்களில் இருந்து தெளிவாகிறது. இயேசு தமது புதிய உடன்படிக்கைக்குள், முந்திய இரண்டு யுகங்களிலும் தேவன் கொடுத்திருந்த நித்திய கொள்கைகளில் பலவற்றை உள்ளிணைத்தார். இவைகள் பழைய உடன்படிக்கையின் பாகமாக உள்ளன என்பதால் அல்ல, ஆனால் அவர் இவற்றை நமக்குக் கொடுத்தார் என்பதற்காகவே நாம் இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது (காண்க எபிரெயர் 8:7-13).

---

குறிப்புகள்

[1]இருப்பினும், இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளும்போது, சந்தர்ப்பப் பொருளை எப்போதுமே கவனிக்க வேண்டும். [2]See Luke 16:17. ரபீத்துவ எழுத்துக்களில் இதே போன்ற மொழிநடை பயன்படுத்தப்பட்டுள்ளது. *Exodus Rabbah* 6.1, "ஞயபிரமாணத்தில் ஒரு சிறிதளவுகூட ஒருபோதும் நீக்கப்படாது" என்று கூறுகிறது. [3]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 87. [4]Mishnah *Aboth* 2.1; 4.2. [5]Lewis, 88.